**பேருவளை நகர சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட. வெத்திலம ரஜபுர பாலம் நிர்மாணம் (11 கட்டம்) மற்றும் ஜோசப் குரே மாவத்தை அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட முறையே ரூபா 1,241,255 மற்றும் ரூபா 1,007,821 என்பன என்ற தொகைகள் | சரி செய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகள் இடப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிக்க வில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 டில் உள்ளவாறு தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய ரூபா 647,217 தொகை நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,151,567 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (இ) | 27 ஊழியர்களிடமிருந்து சம்பளமற்ற விடுமுறைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 141,510 தொகை நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக இயந்திரம், அலுவலக உபகரணங்கள், தளபாடம், பாத்திரங்கள், உபகரணங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் என்ற 05 சொத்துக்களுக்குரிய வருடாந்த பெருமானத்தேய்வு கூட்டு மொத்தமாக ரூபா 11,424 குறைவாகவும் பொருத்திகள், மோட்டார் வாகனம். வீதிகள் மற்றும் மதகுகள் என்ற 03 சொத்து விடயங்களுக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு கூட்டுமொத்தமாக ரூபா 553,993 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகள் இடப்படும். | - மேற்படி - |
| (உ) | மீளாய்வ்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 11,584,802 ஆன காசட்டின் மீதி காண்பிக்க வேண்டி இருந்த போதிலும் ரூபா 15,490,084 வங்கிக் கணக்கின் மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கில் வங்கிக் கூற்றின் மீதி காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கில் காசேட்டு மீதி காசேட்டின் பிரகாரம் காசு மீதி காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 உள்ளவாறு ஆயுர்வேத பொருள் இருப்பு கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகள் இடப்படும். | 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு கணிப்பிடப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2022 ஆம் ஆண்டின் போது விற்று தீர்க்கப்பட்ட ரூபா 1,824,000 கூட்டு மொத்தமான 08 ரேலர்களுக்கு உரிய ரூபா 143,002 ஆன திரண்ட பெறுமானத்தேய்வு, பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 உள்ளவாறு ஒரு கணக்கு விடயமொன்றில் மீதி பரிட்சை மீதிக்கும் பேரேட்டு கணக்கிற்குமிடையே ரூபா 3,927,410 வேறுபாடு காணப்பட்டது. | 2024 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| i. | முற் கொடுப்பனவுகள் | 509,650 | பட்டோலை | எதிர்காலத்தில் அந்த மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவேடுகள் தயாரித்து பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| ii. | கிடைக்க வேண்டிய வற் | 384,970 | பட்டோலை | - மேற்படி - | - மேற்படி - |
| iii. | முற்பணம். | 104,244 | பட்டோலை | - மேற்படி - | - மேற்படி - |
| iv. | மாகாண சபை கடன் | 492,750 | பட்டோலை | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 502,179 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,368,388 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 20,906,576 | 20,906,576 | 13,698,866 | 16,205,642 | 15,208,192 | 15,208,192 | 16,305,655 | 17,612,107 |
| (ii) | வாடகை | 22,546,242 | 22,546,242 | 15,333,131 | 10,448,792 | 26,009,270 | 26,009,270 | 26,537,046 | 4,505,078 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,806,800 | 1,806,800 | 1,781,600 | 78,200 | 200,000 | 200,000 | 106,000 | 137,000 |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | - | - | 2,233,200 | 2,233,200 | 2,824,824 | 966,971 |
| | மொத்தம் | 45,259,618 | 45,259,618 | 30,813,597 | 26,732,634 | 43,650,662 | 43,650,662 | 45,773,525 | 23,221,156 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 17,612,107 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 8,772,609 அதாவது 49 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவைக் கடை வாடகை ரூபா 4,505,078 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 3,235,682 அதாவது 72 சதவீதம் .அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| **(இ) அனுமதிப்பத்திர கட்டணம்** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வியாபார வரி ரூபா 272,400 ஆக இருந்ததுடன் ஆண்டில் அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| **(ஈ) ஏனைய வருமானம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2023 டிசம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 10,793,535 ஆகும். | பட்டோலைகள் தயாரித்து மாகாண இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பபட்டுள்ளது. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹலவல வெத்திமராஜபுர காணியில் கழிவுப்பொருட்களை மட்டப்படுத்துவதற்காக செயின் லோடர் வாடகைக்கு எடுப்பதற்காக. மீளாய்வாண்டில் ரூபா 1,580,970 செலவிடப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் தளம் இல்லாமை யினால் உக்குகின்ற கழிவுப்பொருட்கள் மூலம் கூட்டுப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டுப்பசளை தயாரிப்பதற்காக கழிவுப்பொருள் தளம் காணப்படவில்லை. | கழிவுப்பொருள் செலவினங்களைக் குறைத்து குறைத்து கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 டிசம்பர் 28 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி இன் உப விதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்குவதாயின் தவிர இறைச்சி விற்பனை செய்வதற்காக அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்க முடியாது. இருந்த போதிலும் உரிய நிபந்தனைகளை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத 07 இறைச்சிக் கடைகளுக்கு 2023 சனவரி முதல் ஒக்ரோபர் வரை இறைச்சி விற்பனை செய்வதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | உபவிதியின் நிபந்தனைகளை மீறியதன் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யபட்டுள்ளது. | நிபந்தனைகளுக்கு இணங்குவதாயின் தவிர அனுமதிப் பத்திரம் விநியோகிக்க முடியாது. |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேருவளை நகரசபையின் தலைவரால் பேருவளை நகரசபை அதிகாரப் பிரதேசத்துக்கு உரித்தற்ற பேருவளை பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உரியதாக 2022 ஏப்ரல் 06 ஆம் திகதியல்ல ACLGK/D3/De/01 என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதத்தில் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத | உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வழக்குத் தீர்ப்பின் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன், சபை நிலையத்திலிருந்து தலைவரின் தனிப்பட்ட செலவினங்கள் செய்ய முடியாது. |

இருந்ததுடன், தலைவரால் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட மேற்பட்ட மேற்கூறப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எதிராக வெளித்தரப்பினரால் நகர சபைக்கு தொடுக்கப் தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக 2020 ஆம் ஆண்டு முதல் 2023 பெப்ரவரி மாதம் வரை சபை நிதியத்திலிருந்து ரூபா 254,000 வழக்கு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 செப்டம்பர் 09 திகதிய இலக்கம் 105/03 என்ற அதிவிசேட வர்த்தமானி மூலம் பேருவளை விருந்தினர் விடுதி நிர்வாகம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஏற்படுத்தப்பட்ட எழுத்துமூல உடன்படிக்கை சபையிடம் காணபடாமையினால், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 1,157,116 தொகை செலுத்தாத செலுத்தாமைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | ஆவண காப்பகத்தில் ஏற்பட்ட தீயினால் சகல ஆவணங்களும் அழிவடைந்துள்ளது. | விருந்தினர் விடுதி கட்டணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்க படல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் பொதுச் சந்தையில் 2016 ஆம் ஆண்டு முதல் உடன்படிக்கை செய்யப்படாத 03 கடைகள் காணப்பட்டது. | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் வேண்டும். |
| (ஆ) பொதுச் சந்தையில் இறைச்சி கடைக்காக 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஒக்டோபர் வரை | -மேற்படி- | கடை வாடகை விரைவாக அறவிடப்படல் |

| | | |
|---|---|---|
| அறவிடவேண்டிய ரூபா 3,454,500 தொகை மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,075,410 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களுடன் பேருவளை, மருதானை இல் அமைந்துள்ள உடற்பயிற்சி நிலையத்தில் உடற்பயிற்சி பயிற்சியாளர் இல்லாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டு முதல் பயனற்று காணப்பட்டதுடன், உடற்பயிற்சி உபகரணங்கள் நேரடியாக கடல் காற்றுக்கு உட்பட்டமையின் காரணமாக துருப்பிடிதலுக்கு உட்படும் ஆபத்தும் காணப்பட்டது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உடற்பயிற்சி நிலையத்திற்கு பயிற்சியாளர் ஒருவரை பயிற்றுவிப்பாளர் ஒருவரை ஈடுபடுத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டு முதல் சபை பயன்படுத்திய கெப் வண்டி சபையின் பெயரில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்துக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை சபையின் பெயருக்கு கையேற்றல் வேண்டும். |